# திராவிட சினிமா

17

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்





## கலைஞரின் ‘புதையல்’

எந்தவிதமான கருத்து, ஒரு படைப்பாளிக்கான கதைக்களத்தைக் கண்டடையும் காரணியாகிறது என்பது கவனத்திற்குரியது. எங்கள் இளம்பிராயத்துப் பேச்சுகளை நிறைத்து நின்ற சங்கதி ‘புதையல்’ பற்றிய பல்வேறு கதைகள். வாழ்வு மேம்பட, வளம் பெற ஒரு புதையல் கிடைப்பது குறித்த ஆசைப் பேச்சுகளை ஆக்கிரமிப்பதும், அதைத் தொடர்ந்து அசலாகவே ‘புதையல்’ ரகசியம் பற்றிய பேச்சு செயல்பாடுகளை நோக்கி நகர்வதும் உண்டு. புதையலில் உள்ள தங்கம், வைரம், வெள்ளி பற்றிய பேச்சுகள் அவற்றின் பொருள் மதிப்பை விஸ்வரூபமெடுக்க வைப்பதும் நடக்கும்.

தோட்டங்களில், காடுகளில், பாழடைந்த மண்டபங்களில், சிதிலமடைந்த கோவில்களில் தோண்டும் வேலை ரகசியமாக நிகழும். ரகசியம் அம்பலமாகி, புதையலில் கிடைத்ததான ‘விலை மதிப்பில்லா’ பொருள் குறித்த ‘ரகசியமாகவும் மாறும். இதையே கதைக்களமாக்கி ‘முரசொலி’யில் தொடராக ஒரு நாவலை எழுதியிருக்கிறார் கலைஞர். பின்னர் அந்த நாவலையே திரைக்கதை யாக்கியும் உள்ளார். அதாவது பிறரது நாடகங்களை, நாவல்களைத் திரைக்களமாக்கிய கலைஞர் முதலாவதாகத் தனது நாவலுக்குத் திரைக்கதை அமைத்தது **‘புதையல்’** படத்தில்தான் எனத் தெரிகிறது.

### கழகத்துக்கு ‘கைத்தறி’

திரைப்படம் ‘புதையல்’ பற்றியது என்றாலும், கலைஞரின் திரைக்கதை வீச்சில் தி.மு.க. அரசியல்தானே முன்னுரிமை பெறும். அவை உறுத்தலின்றி இயல்பான காட்சிகளாக விரியும். தி.மு.க.வின் மக்கள்நலன் கருதிய அரசியல் களச் செயல்பாடுகளின் ஆரம்ப நாட்களை ஆக்கிர மித்திருந்த அக்கறை, நெசவாளர் நலன் தொடர்பானது. எனவே, கைத்தறிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பிரச்சாரமும், விற்பனையும்கூடக் களச்செயல்பாடானது. ‘காங்கிரசிற்கு, கதர்’ என்றால் ‘கழகத்திற்கு, கைத்தறி’. அந்த வகையில் திரைப்படத்தின் ஆரம்பக் காட்சியே ஒரு நெசவாளர் குடும்பத்து இளம்பெண் (பரிமளா – பத்மினி) தன் தோழிகளுடன் கைத்தறியின் பெருமையை, **‘சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிச் சேலையடி’** எனப் பாடி ஆடுவதாக அமைந்திருக்கும்.

தினசரி அவளுக்கு, அவளின் பால்ய நண்பன் துக்காராம் (சந்திரபாபு) எழுதும் கடிதத்தை அவள் கிழித்துப் போடுவது வாடிக்கை. ‘ஏன் இப்படிச் செய்கிறாய்?’ எனக் கேட்கும், தபால்காரர் துரையை (சிவாஜி) கடிதத்தைப் படிக்கச் சொல்கிறாள். அவனது குரலில் கடிதம் வேறொரு பரிமாணம் பெற்று அவர்களுக்கிடையேயான காதலாக மலர்கிறது. ‘காலில் மிதிபடும் கருங்கல், சிற்பியின் கரம்பட்டு சிலையாகி விட்டால், அதற்குப் புதிய மதிப்பு வந்து விடுகிறதல்லவா, அதுபோல நேற்று வரை உயிரற்று இருந்த கடிதம், இப்போது உயிர் பெற்றது’ என்று பரிமளா கூறுவாள்.

> **பத்திரிகையில், தான் எழுதிய கதைக்கு, திரைக்கதை, வசனம் எழுதி அதை வேறொரு வடிவத்திலும் வெற்றிபெற வைத்தது எல்லாம் கலைஞரின் ஆற்றலுக்கு அழியாத சான்றுகள்.**

### புதையல் ரகசியம்

திராவிடக் கதை சொல்லிகளின் மனதை ஆக்கிரமித்திருந்த ‘கதைக்களம்’ அண்டை அயல் நாடுகளில் வாழ்வு தேடி தஞ்சம் புகுந்து அல்லலுற்ற தமிழ்ச் சமூகத்தின் அவலக் கதைகள்.

ஓர் இரவு நேர சந்திப்பில் துரை, தனது கதையை இப்படித் துவங்குகிறான், **‘திரைகடல் ஓடிதான் திரவியம் தேடவேண்டுமென்ற திக்கற்ற நிலையிலே இருக்கும் தென்னகத்திலே பிறந்தவர்கள் அலைகளின் முடிவிலே கப்பல் சவாரி செய்து, இலங்கைத் தேயிலைத் தோட்டத்தை எறும்பென மொய்த்தார்கள்’.** தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த அப்பா குமாரவடிவு (எம்.கே.ராதா) கங்காணியின் சூழ்ச்சிக்குப் பலியாகி, மனைவியைக் கொன்றதாகப் பழி சுமத்தப்பட்டுச் சிறை செல்ல நேர்கிறது. ஆதரவற்ற குழந்தைகளான துரையும் தங்கை தங்கமும் ஒரு கபட சாதுவுடன் புறப்பட்டு,’ பிறக்காத தாய்நாட்டில் மறக்காத மனோராவை’ (பட்டுக்கோட்டை அருகிலுள்ள கடற்கரை போர் நினைவுச் சின்னம்) வந்தடைகிறார்கள்.

சூதுக்காரனான சாது, மண்டபத்தில் ‘புதையல்’ ரகசியத்தை ஒட்டுக் கேட்டு, அதை அடையும் ஆசையில் தங்கத்தைக் கிணற்றிலிறக்கிப் பலியிட்டு விடுகிறான். உள்ளூர் முரடன் கையில் சாதுவும் பலியாகிறான்.

காலமாற்றத்தில், புதையல் ரகசியம் தடம் புரளுகிறது. துரையும் பரிமளாவும் பேசிய தங்கம் புதைக்கப்பட்ட விசயத்தை அரைகுறையாக ஒட்டுக் கேட்கும் பண்ணையார் வெள்ளியம்பலம் ‘தங்க வேட்டை’யைத் துவங்குகிறான். வெள்ளியம்பலம் (டி.எஸ்.பாலையா) சதியில் துரை, பரிமளா, துக்காரம் ஆகியோர் சிக்கி அல்லல்பட்டு, அவனது மனைவியின் (எம்.என்.ராஜம் ) துரோகச் சதியால் விடுதலையடைவதுதான் கதைக்களம்.

### ‘போதும் என்ற மனமே’

ஏகப்பட்ட பாத்திரங்கள் கொண்ட கதைக் களத்தில், இரண்டு காலகட்டங்களில் நிகழும், புதையல் வேட்டை பல விபரீதங்களுக்கும் காரணமாகிறது. புதையலின் தன்மையும் பரிமாணமும், மொழியும் உள்ளடக்கமும்கூட மாறியபடி இருக்கிறது. இங்குதான் கலைஞரின் கைவண்ணம் மிளிர்கிறது.

தேவநகரி லிபியில் எழுதப்பட்டிருந்த புதையல் ரகசியம், தமிழுக்கு மாற்றப்படுகிறது. இது நடப்பது கடவுள் அருளால் அல்ல, அயோக்கியர்களிடமிருந்து நல்ல உள்ளம் கொண்டவர்களிடம் கைமாறும் போது புதையல் ரகசியம் ‘அறிவுரை’ ஆக மாறுவதும் நிகழ்கிறது.

சமஸ்கிருத தேவநகரி லிபியில் ‘எழுவான் தொழுவான் இரண்டுக்கும் இடையிலே காக்கு மூக்கு நிழலிலே கங்கை ஊறும் இடத்திலே’ என அசலான புதையல் குறிப்பாகவே இருந்தது தமிழில், ‘புதையலைத் தேடி அலையாதே. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து’ எனும் அறிவுரைக் குறிப்பாக ஆகிறது.

தானே காதலித்து மணந்த பரிமளாவின் அப்பா, தன் மகளின் காதலை ஏற்க மறுத்து அரிவாளோடு அலையும், சமகால ஆணவக் கொலை சாதி வெறியர்களின் பிரதிநிதியாகிறார்.

வாழ்வில் சொல்லொண்ணாத் துயரம் அடைந்த துரையின் அப்பா ஞானியின் வடிவில், ‘ஓ மேக மந்தைகளே! உங்கள் வாழ்நாள் சதமென்று எண்ணியிருக்கிறீர்களா? குளிர்க் காற்றுதான் உங்கள் எமன் என்பதை மறந்து விடாதீர்கள். மேகங்களே உங்கள் சாவுக் கண்ணீர், மாநிலத்தை வாழ வைக்கவும் உதவுகிறது. சில சமயம் அழிக்கவும் காரணமாகிறது’ எனக் கடற்கரையில் நின்று மேகங்களோடு பேசுகிறார்.

மாயாண்டியாக கடற்கரையில் அலையும் வேளையில் புதிய புதையலை உருவாக்கி, மகளையும், மருமகளையும் ஆதரிக்கிறார்.

வழக்கம்போல கலைஞரின் பொருள் பொதிந்த வலிமிகுந்த மொழி திரைப்படமெங்கும் விரவிப் படர்ந்திருப்பதைக் காணலாம். அப்பாவும் மகனும் அடையாளம் கண்டுகொள்ளும் காட்சியில் துரை, ‘ஒரு தோட்டத் தொழிலாளி என் அப்பா. தாயகத்திலே பிழைத்திட வழியில்லாத காரணத்தால், விழியிலே நீர்ப் பெருக்கி வெளிநாட்டுக் கரையோரங்களில் மோதிச் சீரழியும் லட்சோப லட்சம் தமிழ்ப் பெருமக்களிலொருவர்தான் அவர்’ என்கிறான்.

1957-ஆம் ஆண்டு வெளியான, இந்தப் படத்தை இயக்கியது கலைஞருக்கு நெருக்கமான கிருஷ்ணன் - பஞ்சு இயக்குநர்கள். மூன்று மணி நேரம் கொண்ட இந்தப் படத்தின் பாடல்கள் இப்போதும் கேட்கத் தூண்டும் காலத்தால் அழியாதவை.

பத்திரிகையில், தான் எழுதிய கதைக்கு, திரைக்கதை, வசனம் எழுதி அதை வேறொரு வடிவத்திலும் வெற்றிபெற வைத்தது எல்லாம் கலைஞரின் ஆற்றலுக்கு அழியாத சான்றுகள்.

...படம் விரியும்

## இயல்பு திரும்புமா?




‘மணிப்பூர் பற்றி எரிகிறது’ என்பதே, கடந்த சில வாரங்களாகப் பொதுவெளியில் அதிகம் உரையாடப்பட்டு வரும் செய்தி. இந்நிலையில் மணிப்பூர் பற்றிய சிறப்புக் கட்டுரையை ஆகஸ்ட் மாத ‘தி கேரவன்’ இதழ் வெளியிட்டுள்ளது. மணிப்பூர் களச் சூழலை நேரடியாகக் கண்டு அந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. ஊடகங்கள் மூலம் நமக்குத் தெரிவிக்கப்படும் தகவல்களைக் காட்டிலும் அங்கு நிலைமை மிக மோசம் என்பதையே அந்தச் செய்தித் தொகுப்புத் தெரிவிக்கிறது. மலைப் பகுதி X சமவெளிப் பகுதி மக்களுக்கு இடையிலான பிரச்சினையாக மட்டும் மணிப்பூர் கலவரத்தைச் சுருக்கிவிட முடியாது. மதம், இனம் போன்ற பாகுபாடுகள் இந்த நிகழ்வில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்றாலும், வகுப்புவாத சக்திகளால் மணிப்பூர் சூறையாடப்பட்டதையும் ‘தி கேரவன்’ சுட்டிக்காட்டியுள்ளது. அடிப்படை வாழ்வுரிமைகூட மறுக்கப்பட்டு, மலைப்பகுதி மக்களான ‘குக்கிகள்’ முற்றிலும் முடக்கப்பட்டுள்ளனர்.

வன்முறையாளர்கள், போதைப் பொருள் விற்பனையாளர்கள், வந்தேறிகள் போன்ற மனிதத் தன்மையற்ற முத்திரைகளைக் குத்துவதன் மூலம் சிறுபான்மைச் சமூகத்தையே எதிரியாகக் கட்டமைத்திருக்கிறது மணிப்பூரை ஆளும் பா.ஜ.க. அரசு. ஒன்றிய அரசு மணிப்பூர் கலவரத்திற்கான முழுப் பொறுப்பையும் ஏற்று அங்கு அமைதி திரும்ப வழிவகை செய்யவேண்டும் என மணிப்பூர் சென்று வந்த ‘இந்தியா’ கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி உள்ளனர். ஜனாதிபதியைச் சந்தித்தும் கோரிக்கை விடுத்துள்ளனர். விரைவில் மணிப்பூர் இயல்புக்குத் திரும்ப வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்





இராமநாதன்

### ‘குறிஞ்சி மலர் அரவிந்தன்!’

2001-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மேயராகவும், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த, நமது முதலமைச்சர் அவர்கள், புதுப்பேட்டைப் பகுதியில் நடைபெற்ற பொங்கல் விழாவுக்கு வருகை தந்தார். அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நான், என் மகனுக்குப் பெயர் வைக்க, தளபதி அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். அவர், தனது நடிப்பில் வெளியான “குறிஞ்சி மலர்” நாடகத்தில் அவரது கதாபாத்திரத்தின் பெயரான ‘அரவிந்தன்’ என்கிற பெயரை என் மகனுக்குச் சூட்டி, அவனைக் கையில் தூக்கி அனைவருக்கும் அறிமுகம் செய்தார். இது, அந்த நேரத்தில் எடுக்கப்பட்ட புகைப் படம்.

**-ஏ.வி.இராமநாதன்,**
**மாவட்டப் பிரதிநிதி,**
**சென்னை மேற்கு**
**மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உணர்ச்சிவசப்பட்ட கலைஞர்!

**1977-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் கழகத்துக்குள் குழப்பத்தை உருவாக்கும் விதமாக, ‘தலைமைப் பொறுப்பில் இருந்து கலைஞர் விலக வேண்டும்’ எனச் சில முன்னணித் தலைவர்கள் கையெழுத்து வேட்டை நடத்தினர். அதையறிந்த கலைஞர், கழகத்தின் கட்டுப்பாடு குலைந்துவிடக்கூடாது எனத் தானாகவே கழகத் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். அந்தக் கடிதம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் கோபாலபுரம் இல்லத்தில் குவிந்துவிட்டனர். தொண்டர்களின் அழுத்தம், தலைவராக கலைஞரே தொடர வேண்டும் என செயற்குழுவின் தீர்மானத்துக்குப் பின்னர் பதவி விலகலைத் திரும்பப் பெற்றார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 199




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131